REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5| சென்னை: ஆனி 22உ சனி (6—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 23உ ஞாயிறு (7—7—57) [இதழ் 19

தென்னாட்டு ஆலைகள் வஞ்சிக்கப்பட்டன!

"ஆப்பிரிக்க, எகிப்து பஞ்சு இறக்குமதி செய்வதில் இந்திய சர்க்காரின் கொள்கை, 'முதலில் வருவோர் முதலில் கவனிக்கப்படுவர்' என்பதாக உள்ளது. இதன் விளைவாக தென்னிந்தியாவில் உள்ள ஒரு ஆலைகூட ஆப்பிரிக்கப் பஞ்சு இறக்குமதிக்கு லைசென்ஸ் அளிக்கப்பட வில்லை என்பதைத் தெரிவிக்க வருந்துகிறோம். பெரிய இறக்குமதியாளர்கள் அதிக இலாபம்அடைய ஆலைகளுக்கு அதிக விலையில் விற்பனை செய்துள்ளன.

(5-ம் கலம் பார்க்க)

சுப்பிரமணியம் இசைக்கும் 'சமரச கீதம்'!

திராவிட நாடு கோரிக்கைக்காகப் போராட இது நேரமல்லவாம்

10 ஆண்டுகள் கழித்து அவசியமானல் போராடலாமாம்

சட்டசபையில் வரவு-செலவு திட்ட விவாதத்திற்கு நிதிமந்திரியின் பதில்

சட்டசபையில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்த நிதி மந்திரி சுப்பிரமணியம், 'திராவிடஸ்தான் கோரிக்கையை ஒரு பத்து வருட காலத்திற்கு ஒத்திவைக்கவேண்டும்,' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தவரைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

'ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் 'அகில இந்திய' அரசியல் அமைப்பின்கீழ் தமிழகம் வளம்பெறவில்லை என்ருல், எல்லோருமாகச் சேர்ந்து, தமிழக விடுதலைக்காகப் பாடுபடலாம்,' என்றும் கூறினுராம்!

திராவிட நாடு கோரிக்கை பற்றி அவர் குறிப்பிட்டதாவது :—

"இன்றைய தமிழக மக்களின் பிரச்சினைகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் தி. மு. கழகத்தவர் உணருவரேயானுல், தனிநாடு வேண்டும் என்ற உங்கள் கோரிக்கை இப்போது முக்கியமான பிரச்சினை அல்ல என்பதை நீங்கள் உணர முடியும் என்று நான் நம்புகிறேன்.

'நாம் எல்லோரும் ஒரு ஐக்கிய இந்தியாவின் அங்கமாக இருக்கச் சம்மதித்து, ஒன்றுபட்டு, ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முயற்சித்தாலன்றி குறுகிய காலத்தில், நாட்டு மக்களை எதிர்நோக்கியிருக்கும் எந்தப் பிரச்சினையையும் நாம் தீர்க்க முடியாது.

மேலும் இதற்கப்பாலும் ஒன்று கூற விரும்புகிறேன்.

'குறைந்தபட்சம் இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாடு மேலும் துண்டாடப்படமாட்டாது என்பதை தி. மு. கழகத்தினர் உணருவது நல்லது.

'எத்தனைதான் உரத்துக் கூவினுலும், கிளர்ச்சி செய்தாலும் நாட்டுப் பிரிவினையை யாரும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே, இந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில் 'திராவிட நாடு வேண்டும்,' என்ற உங்கள் கோரிக்கை சாத்தியமானதல்ல! இருந்தும், நீங்கள் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபடுவதாகக் கருதினுல், நாம் நமது சக்திகளை பாழாக்கிக் கொள்கிறோம் என்றே பொருள்படும்.

"அதனுல்தான் நான், தி. மு. கழகத்தினருக்கு வற்புறுத்திச் சொல்ல விழைவது எல்லாம், நம்மிரு கட்சிகளும் கொஞ்ச நாளைக்கு இந்த இலட்சிய வேறுபாடுகளை மறந்து, ஒரு பத்து அல்லது ஐந்தாண்டுகாலம் ஒன்றுபட்டு நம்முன் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேலை செய்தால் அல்லாது, தமிழ் நாட்டிற்கு எந்தவித முன்னேற்றமும் கிடைப்பதற்கில்லை.

"ஒரு ஐந்து அல்லது பத்து ஆண்டுக் காலம், இந்தக் கோரிக்கையை மறந்துவிடுங்கள்; நாம் ஒன்றுபட்டு வேலை செய்யலாம். அந்தப் பத்தாண்டுக் கால முடிவில், 'வடக்கு வாழ்கிறது-தெற்கு தேய்கிறது,' என்பதை நாங்கள் உணருமாறு செய்தால், பின்னர் நாம் எல்லோரும் கூட்டாகவே, அப்போது நிர்ணயித்துக் கொள்கிற இலட்சியத்திற்காகப் பாடுபடுவோம்."

முக்கிய திருத்தம்

இன்றைய இதழின் தலைபக்கத்தில்—மூன்ரும் கலத்தில்—5-வது பாராவில், '1950-ல் இராணுவச் செலவு 16கோடி ரூபாயாக இருந்தது' என்பதை, '1950-ல் இராணுவச் செலவு 164 கோடி ரூபாயாக இருந்தது' எனத் திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

(ஆ-ர்)

சர்க்காரின் நிர்வாகம் முழுவதும் ஊழல் நாற்றமடிக்கிறதே!

பொது மராமத்து இலாகாவில் இலஞ்சம் தலைவிரித்தாடுகிறதே!

சட்டசபையில் துணைத் தலைவர் குற்றச்சாட்டுகள்

ஐதராபாத், ஜூலை 5—

ஆந்திரப் பிரதேச மாநில சர்க்காரின் எல்லா நிர்வாகத்துறைகளிலும், குறிப்பாக பொது மராமத்து இலாகாவிலும் இலஞ்ச ஊழல் தலைவிரித்தாடுவதாக சட்டசபைத் துணைத் தலைவர் கொண்டா இலட்சுமணன் அவர்கள் சாடியிருக்கிருர்.

பட்ஜெட் பொது விவாதத்தில் கலந்துகொண்ட அவர், சில அதிகாரிகள் 'கமிஷன்' பெற்று வரும் சம்பவங்கள் தனக்குத் தெரியும் என்றும், தான் அதை நிரூபிக்கவும் தயாராக இருப்பதாகவும், கூறியிருக்கிருர்.

உடனே நிதிமந்திரி குறுக்கிட்டு 'இந்த உறுப்பினர் சபையில் இந்த விவகாரங்களைப் பற்றிப் பேசுவதற்குமுன் சம்பந்தப்பட்ட மந்திரிக்கு முன்கூட்டியே அதைத் தெரிவித்திருக்க வேண்டும்; அது குறித்து மந்திரி எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலிருந்திருந்தால், உறுப்பினர் சட்டசபையில் இது பற்றிப் பேசியிருக்கலாம்; என்று கூறினுர்.

உடனே சபைத் தலைவர் காளேசுவர ராவ், உறுப்பினர் வேறு விஷயத்தினை துவங்கலாம் என்றும், இலஞ்சம் பற்றிய அவரது கருத்தினை மந்திரிகளும், உறுப்பினர்களும் புரிந்துகொண்டிருப்பர் என்றும் கூறியிருக்கிருர்.

★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு' தனி இதழ்

சென்னை தோழர்கள் கவனத்திற்கு:

அண்ணு அவர்கள் சட்ட மன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின்மீது ஆற்றிய உரையின் முழு விவரமும் நாளை (7-7-57) காலை 'நம் நாடு' தனி இதழில் இடம் பெறுகிறது; விற்பனையாளர்களிடம் நாளை காலையிலேயே இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு தோழர்கள் கோரப்படுகிருர்கள்.

'சாமி வரம் தந்தும் பூசாரிக்கு மனம் இல்லை'

'நிபுணர் சிபாரிசுக்குப் பிறகும் டில்லிக்கு விருப்பம் இல்லை'

'உயர்தர தொழில் நுட்பக் கல்விக் கழகம் இன்னும் நிறுவப்படாதது ஏன்?'

டில்லியின் வஞ்சக போக்கை அம்பலப்படுத்துகிருர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி

"பல்கலைக் கழக நூற்ருண்டு விழாவின்போது ஒரு பெருந்தொகை மானியமாக அளிக்கப்பட்டது குறித்து நான் மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்; நன்றி கூறுகிறேன். இந்த மானியம், தேவையான பல உயர்தரக் கல்விப் பிரிவுகளை பல்கலைக் கழகம் துவங்க உதவும்.

"இதற்கொப்ப, மாநில சர்க்காரும் ரூ. 10 இலட்சம் வழங்கியிருக்கிருர்கள். இந்த 'மானியம்' மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள போட்டி பற்றிக் கூறுவதாகும்.

"இந்த 'வரதட்சணை'யை மாநில சர்க்கார் தந்தால் அல்லாது, மானியம்தர மத்திய சர்க்கார் தயாராக இல்லை. வரதட்சணை முறையை நாம் பல துறைகளில் ஒழித்துவிட்டோம்; ஆனுல், மானியம் வழங்கும் விஷயத்தில் மட்டும் இந்த மாநில சர்க்கார் 'வரதட்சணை' தரவேண்டியுள்ளது. எதிர்காலத்தில் இந்தத் தொகை எப்படித் தரப்படப்போகிறது என்பதை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

"உயர்தரத் தொழில் நுட்பக் கழகம் ஒன்றினை சென்னையில் நிறுவ வேண்டும் என்று தென் மண்டல தொழில் நுட்பக் கல்விக் குழு முடிவு செய்தது. 'சாமி வரம் தந்தாலும், பூசாரி வரம் தருவதில்லை' என்பதுபோல, நிபுணர் குழு சிபாரிசு செய்தாலும், டில்லி அனுமதி தருவதில்லை—இதுவரை தரவில்லை.

"அந்தக் கழகத்திற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது; மின்சாரம், மற்றும் தண்ணீர் வசதிகள் செய்தாகிவிட்டது; செய்ய வேண்டியதெல்லாம் செய்தாகிவிட்டது; ஆனுல், என்ன செய்தாலும் மருமகளைப் பற்றித் திருப்தி அடையாத மாமியாரைப் போல் இருக்கிறது டில்லி!"

என்றும் டாக்டர் ஏ. இலட்சமணசாமி அவர்கள் சென்னை மேல் (சட்ட) சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(அவரது பேச்சின் மற்ற பகுதிகள் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

டில்லி எசமானரின் கட்டளை அப்படியாம்!

மேல்சபையில் அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 4—

"கேரளம், மைசூர் மாநிலங்களிலுள்ள மாணவர்களுக்கு, சென்னை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதற்குக் காரணம், மாநில அமைப்புச் சட்டத்தின் 113-வது பிரிவின்படி மத்திய அரசாங்கம் சென்னைக்கு உத்திரவு பிறப்பித்துள்ளதேயாகும்"

என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் மேல்சபையில தெரிவித்துள்ளார்.

'கிராக்கிப்படி'யை உயர்த்துவது சாத்தியமில்லையாம்!

அமைச்சர் கூறுகிருர்

சென்னை, ஜூலை 5—

"கிராம அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியவர்களின் 'கிராக்கிப்படி'யை உயர்த்துவது சாத்தியமற்றது என்றும், இதனுல் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் அதிகச் செலவைத் தாங்கக்கூடிய நிலையில் தற்பொழுது சர்க்கார் இல்லையென்றும் அமைச்சரவை துணைக் குழு சிபாரிசு செய்திருக்கிறது; இந்த சிபாரிசை சர்க்கார் ஏற்றுக் கொண்டுவிட்டது" என்று, சட்டசபையில் அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

தென்னுட்டு ஆலைகள்...

(மேல் கட்டத்தின் தொடர்ச்சி)

"இறக்குமதி செய்வதற்கு 'முதலில் வருவோர் முதலில் கவனிக்கப்படுவர்' என்ற கொள்கையை ரத்து செய்யவேண்டும். உண்மையில் உபயோகிப்போருக்கே தேவைக்கேற்ப லைசென்ஸ் வழங்க வேண்டும்"

என்று, கோவை ஆலை அதிபர்கள் சங்கம், இந்தியப் பேரரசின் வாணிகத் தொழில் அமைச்சர் எம். ஷா என்பாரிடம் கொடுத்த மனு ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—7—57 சனி

எடுத்தோதுவோம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக செயலாற்ற வேண்டுமானல், மக்கள்மீது புது வரிகள் போடத்தான் வேண்டும் என்று நியாயம் பேசி, மொத்தத்தில் 112 வரிகளை இந்தியப் பேரரசு பொதுமக்கள்மீது விதித்திருக்கின்றது.

திட்டத்தைச் செயலாற்றுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள கால அளவை மேலும் இரண்டொரு ஆண்டுக் காலத்துக்கு நீடித்துக் கொள்வதின் மூலம் ஏராளமான புது வரி விதிப்புக்கு இடமில்லாமலே திட்டத்தை நிறைவேற்றக்கூடும் என நல்லறிஞர் எடுத்துக் காட்டினர். அந்த விரும்பத்தகுந்த நேர்மையான பரிகாரத்தை நியாயமானது என ஒப்புக்கொண்டு, புது வரிகளைப் போடுவதைக் கைவிட்டு, திட்டத்தின் கால அளவைக் கூட்ட இந்தியப் பேரரசு உடன்பட்டிருக்க வேண்டும். அதுதான் வரவேற்கத்தக்கதுமாகும்.

ஆனல் இந்தியப் பேரரசோ பிடிவாதம் பேசி வருகிறது. பொதுமக்கள் எந்த அளவு வதைபடுவதாக இருந்தாலும் அதுபற்றித் தமக்குக் கவலை இல்லை என்ற வெறிக் குணத்துடன் பொதுமக்களின் நித்திய வாழ்க்கையைச் சூறையாடும் புது வரிகளை ஏராளமாகப் போட்டு, குறிப்பிட்ட ஐந்தாண்டுக் காலத்துக்குள் திட்ட ஏற்பாடுகள் அனைத்தையும் முடித்துத் தீருவது என இந்தியப் பேரரசு முடிவு கட்டிவிட்டது.

பொதுமக்களின் குருதியை விரைவாக உறிஞ்சக்கூடிய பேரரசின் புது வரிகள் ஒரு பக்கம் இருக்க, தேர்தலுக்கு முன்பே இரண்டாவது திட்டத்தை

லைக்தான், பண்டித நேரு குறிப்பிட்டதுபோல், தேர்தலுக்கு முன் பொதுமக்களிடம் காங்கிரசுக் கட்சி கூறவில்லையே அல்லாது, வரி விதிக்கப் போவது குறித்துப் பொதுப்படையாகக் கூருமல் இல்லை.

வரி விதிக்கப்போவது குறித்துக் குறிப்பிட்டிருப்பதுடன், வரி விதிப்பின் தன்மை குறித்தும் மிகமிகத் தெளிவாக, தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரசுக் கட்சி குறிப்பிட்டுத்தான் இருக்கின்றது. அதாவது, வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ளுகின்றவர் மீது முக்கியமாக வரி விதிக்கப்படவேண்டும் என்றும், அதற்கொப்ப வரி விதிப்பு அடிப்படையைத் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும், அதன் பலனாக வருவாய்க்கும் செல்வத்திற்கும் இடையே இருந்துவருகின்ற மேடுபள்ளம் சமமாக்கப்படுவதற்கு வழியாகும் என்றும், காங்கிரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் அறிக்கையில் கண்டுள்ளபடி புது வரி விதிக்க காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வரவில்லை என்பதை அனைவரும் அறிவர். பல்லாண்டு காலமாக வளைந்த வாழ்வில் வீழ்ந்துகிடக்கும் மக்கள் மீதே, புது வரிகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதே உண்மையாகும்; எனவேதான் நமது எதிர்ப்பு.

மொத்தத்தில் 112 வரிகள் போடப்பட்டுள்ளன. அதில், இறக்குமதி செய்யப்பட்டுவரும் 90 பண்டங்கள்மீது சுங்கவரி போடப்பட்டிருக்கின்றது. 13 கலால் வரி. புகை வண்டி பிரயாணத்தின்மீது வரி. அஞ்சல் அட்டையின் விலை உயர்வு. தந்திக் கட்டண உயர்வு.

அஞ்சல் அட்டையின் விலை உயர்வை நீக்கி அஞ்சல் உறைகளுக்கு விலையைக் கூட்டவும், காபி, தேயிலைமீது விதிக்கப்பட்டிருந்த கலால் வரியை விலக்கவும், மண்ணெண்ணெய்மீது விதிக்கப்பட்டிருந்த வரியைத் திரும்பப் பெறவும் நிதி அமைச்சர் பின்னர் ஒப்பினர். பத்திரிகை அச்சுத்தாள்மீது விதிக்கப்பட்ட வரி, தம்மை அறியாமல் தவறுதலாக வரி பட்டியலில் சேர்ந்துவிட்டதாகக் காரணம் காட்டி, அவ்வரியையும் வாபசு பெற்றுவிட்டார் நிதி அமைச்சர்.

இரண்டாவது திட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்ட ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றுவதற்காகத்தான் புதுவரிகள் போடப்படுவதாக நிதி அமைச்சர் கூறினர்.

ஆனல் போடப்பட்ட வரிகள் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை, திட்டத்தின் வெற்றிக்காகப் பயன்படுத்தப் போவதாகத் தெரியவில்லை. அப்புதுவருமானம் திட்டத்தின் பணத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிலும் இல்லை.

இராணுவச் செலவிற்கு 50 கோடி ரூபாயும், உணவு மானியமாக ரூபாய் 25 கோடியும், புதிய வரிகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருமானத்திலிருந்து செலவிடுவதற்கு இந்தியப் பேரரசு திட்டமிட்டிருக்கிறது.

1950-ல் இராணுவச் செலவு 16 கோடி ரூபாயாக இருந்தது. அத்தொகை 1957-ல் 252 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது.

திட்டத்தை நிறைவேற்றி வைக்கவே புது வரிகள் போடப்படுகின்றன என்று இந்தியப் பேரரசு கூறுகிறது. பொதுமக்களைக் கசக்கிப் பிழிந்து புதுவரிகள் மூலம் பெற இருக்கின்ற வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கை இராணுவத்திற்குச் செலவிட இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கின்றது.

காங்கிரசு ஆளவந்தார்கள்

மாநில விவகாரங்களில் தலையிடும் டில்லியின் போக்கு!

'நல்லுறவுகளுக்கு உலைவைக்கிறது'

'கண்டிக்கவேண்டிய காலம் கனிந்துவிட்டது'

சென்னை மேல் (சட்ட) சபையில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் முழக்கம்

சென்னை, ஜூலை 3—

மாநிலங்களின் விவகாரங்களில் மத்திய சர்க்கார் தலையிடும் போக்கினை, டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் சென்னை மேல் சபை பட்ஜெட் விவாதத்தின்போது வன்மையாகக் கண்டித்தார்.

டில்லியின் போக்கு, இருமாநிலங்களுக்கிடையில் உள்ள உறவுகளை எப்படி பாதிக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினர்.

அவரது கருத்துமிகு உரையின் சாரம் இங்கு தரப்படுகிறது:—

"சில கல்வி நிலையங்களில் கேரளத்திற்கென சில இடங்களை ஒதுக்குவது பற்றி, சேலம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அறிக்கையை நான் பத்திரிகையில் கண்டேன். என்னுடைய கருத்து, தோழர் எஸ். வி. இராமசாமி எம் பி.-யின் கருத்திலிருந்து மாறுபட்ட ஒன்ருகும். இடங்களின் எண்ணிக்கை என்ற கண்ணேட்டத்திலிருந்து அவர் இதனை அணுகுகிருர். ஆனல் நான் கவலைப்படுவது, அந்த எண்ணிக்கை பற்றி அல்ல; இரு மாநிலங்களுக்கிடையேயும் உள்ள நல்லுறவுக்கு ஏற்படும் நஷ்டம் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன் வேறெதையும்விட, இந்த விவகாரத்தில் டில்லியின் தாக்கீதினைத்தான் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

"மாநில புது அமைப்புச் சட்டப்படி, மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கலாம்; ஆனலும், இரு மாநிலங்களுக்கிடையேயும் கருத்து வேறுபாடு இருந்தாலும், இது போல தாக்கீது பிறப்பிப்பது அல்ல டில்லியின் கடமை! டில்லி, இரு மாநிலங்களையும் நம்பிக்கையோடு அணுகி, இது குறித்த ஒரு சாத்தியமான ஏற்பாட்டினைச் செய்திருக்கவேண்டும்!

"கேரளத்தில் நூறு இடங்களுடன் கூடிய ஒரு கல்லூரி துவங்கப்படுவதால், அந்த மாநிலத்திற்கென இந்த மாநிலக் கல்லூரியில் இடம் ஒதுக்கத் தேவை இல்லை என்று இந்த மாநில சர்க்கார் கருதியிருக்கலாம். அவர்கள், கேரள சர்க்காருடன் இது குறித்து ஒரு உடன்பாட்டிற்கு வந்திருக்கவேண்டும்.

"இதைவிடுத்து, தங்களுக்கு சட்டப்படி உரிமை இருந்தாலும்கூட, டில்லி தாக்கீது பிறப்பித்த செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

"மாநில விவகாரங்களில் டில்லி இப்படித் தலையிடும் போக்கினைக் கண்டிக்க வேண்டிய காலம் பிறந்துவிட்டது என்றே நான் கருதுகிறேன்."

★

'மாநிலத்தின் 'சுதந்திரம்' கொஞ்சம்கொஞ்சமாக டெல்லியால் பறிக்கப்படுகிறது'

'இதுகுறித்து பொறுப்புள்ளவர்கள் கவலைப்படுகின்றனர்'

மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் பிச்சைக்காக கையேந்த நேரிடும் நிலை

...வும் திட்டத்தை ஆத...ண்டும் எனப் பொது...முடிவு கட்டித்தான் ...கட்சியைச் சார்ந்த ...க வாக்களித்து, ...ளை ஆட்சிபீடத்தில் ...தி இருப்பதாகவும், ...திட்டத்தை ஒப்புக்... பொதுமக்கள் வரி...ளையும் ஏற்கனவே ஒப்...டவர்களாகின்றனர் ...மக்களாட்சி மாண்பு...ம் முன்வருகின்றனர், ...சு ஆளவந்தார்கள். ...ாங்கிரசு ஆளவந்தார்க...லாம் தலைமை ஆளவந் ... இருக்கும் பண்டித...ா, கூட்டுத் தோழர் ...ம் மேற்படி வாதத்தை ...காள்ளவில்லை. அதற்கு 'தேர்தல் நேரத்தி...புது வரிகள் குறித்து ...க்களிடம் நாம் குறிப்...ந்தது நம்முடைய ...ம்' என்று காங்கிரசுக் ...ட்டத்தில் தெளிவாகக் ...ட்டுள்ளனர். எனவே, ...சி மாண்பு காட்டி ...ஆளவந்தார்கள் புது...கு நியாயம் பேசுவது ... பொருந்தாது என் ...ளிவு.

...கப்படப் போகும் புது...ன் விளக்கமான பட்டிய

வரி. பொதுமக்கள் அனைவரையும் நேரடியாகப் பாதிக்கக் கூடிய வரிகள். இவ்வரிகளை மக்கள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும், அரசாங்கத்திற்குச் செலுத்துவதிலிருந்து மக்கள் தப்பவே முடியாது.

ஆறே ஆறு வரிகள் நேரடி வரிகள்; வரிகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய பணம் படைத்தவர்கள்மீது விதிக்கப்பட்டுள்ளன. இவ்வரிகளை அரசாங்கத்திற்குச் செலுத்துவதிலிருந்து, அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியும். இதற்கு ஆதாரமாக வருமான வரி நிலுவையைக் குறிப்பிடுவதே போதுமானதாகும்.

இப்புது வரிகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருமானம் 92·85 கோடி ரூபாயாகும். அத்தொகையில் 15 கோடி ரூபாய் மாநிலங்கள் அனைத்துக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இத்தொகையில் ஏழைமக்களையே பெரிதும் பாதிக்கும் மறைமுக வரிகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருமானம், மொத்த வருமானத்தில் 74 சதவிகிதமாகும். செல்வந்தர்களை பாதிக்கும் நேரடி வரி மூலம் கிடைக்க இருப்பது 26 சதவிகிதமாகும்.

நிறைவேற்றத்துக்குத்தான் புது வரிகள்' என்ற நியாயம் என்ன ஆயிற்று?

நம்மீது சுமத்தப்பட்டுள்ள வரிகள் திட்டத்தை நிறைவேற்ற அல்லவே அல்ல.

இப்பேருண்மையை நாட்டு மக்களிடம் ஜூலை ஏழாம் நாள் தெளிவுபட எடுத்துரைப்போமாக!

முதலாண்டுத்திட்டம் முழுத் தோல்வி பெற்றிருக்கின்றது. அதனல், ஒவ்வொரு குடிமகனும் பெற்ற பலன் என்ன என்பதை இங்கு குறிப்பிடுகின்ருேம்:—

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறினல் அவர்கள் எதிர்பார்க்கும் ஒரு மனிதன் ஓராண்டு சராசரி வருமானம் ரூ. 281—இது இவர்கள் கணக்கு! ஆனல், இந்த ஆண்டு புள்ளிவிவரம் என்ன சொல்லுகிறதென்ருல், ஒரு மனிதனின் சராசரி வருமானம் ரூ. 262! 1954-ல் ரூ. 269 ஆக இருந்தது—இப்பொழுது ரூ. 262 ஆக குறைந்திருக்கிறது. ஆனல் திட்டத்தில் இவர்கள் எதிர்பார்ப்பது ரூ. 281. ஆனல் 1948-ல் நாடு எப்படியிருந்ததோ, அப்படியே இன்றைக்கும் இருக்கிறது நாடு! திட்டம் நிறைவேறி ஆகிவிட்டது—பலனை அனுபவித்தவர்கள் அனுபவித்தாகிவிட்டது!"

இவ்வுண்மையையும் ஏழாம் நாள் கூட்டத்தில் எடுத்தறிவிப்போமாக!

சென்னை மேல் சட்டசபையில், நிதி மற்றும் நிர்வாகத் துறைகளைப் பொறுத்து மாநிலத்தின் எதிர்காலம் என்ற முக்கியமான அம்சம்பற்றிப் பேசுகையில் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"மாநிலத்தின் 'சுதந்திரம்' டெல்லி சர்க்காரரல் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டு வருவதைக் குறித்து பொறுப்புமிக்கவர்களிடையே பெருங்கவலை நிலவி வருகிறது.

இந்தநிலைக்கு அநேகமாக, மத்திய சர்க்கார் வசம், கஜானு சாவி இருப்பதும், மாநில சர்க்காரிடமிருந்து ஸ்தல ஸ்தாபனங்கள் பெறுவது போல நாம், மத்திய சர்க்காரிடமிருந்து 'பிச்சை' கேட்டுப்பெற வேண்டியிருப்பதும்தான்!

"நிபந்தனைகள், மத்திய சர்க்காரால் பொறுத்துக் கொள்ளக்கூடியனவாக இல்லாவிடினும் மத்திய சர்க்கார், மாநிலங்களுக்கு உதவுவது என்ற விவகாரம் வரும்போது, ஏராளமான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன; நாம் எத்தனை தான் ஆற்றல் கொண்டவர்களாயிருந்தாலும் தளர்த்தமுடியாத கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன,

"டிக்கன்ஸ் எழுதிய, 'டேவிட் காப்பர்பீல்டு' என்ற கதையில் வரும் மிகாவ்பர் என்பான், எப்போதும், ஏதாவது தனக்குச் சாதகமாக, யாராவது உதவமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டே இருப்பானும்!

"அதுபோல இந்த மாநில சர்க்கார், எப்போதும், டெல்லியிடம் பிச்சை கேட்டுக் கையேந்திக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது.

"எனது இந்தக் கருத்து தவருனதாகக்கூட இருக்கலாம்; ஆனல் அது தவறென்று கூறி யாராவது என்னைத் திருத்துவதை நான் வரவேற்கிறேன்.

"மத்திய உள்நாட்டிலாகா, மாநில சர்க்கார்கள் எப்படி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சில

(4-ம் பக்கம் பார்க்க.)

கூறியதாக... ரிக்க வே... மக்கள் காங்கிரசு... வர்களுக்... அவர்க... அமர்த்... எனவே கொண்ட... விதிப்புக... புக்கொன்... என்றும் பேசிடவு... காங்கி... ஆனல்,... ளுக்கெல்... தாராக நேருவே... கள் கூற... ஏற்றுக்... மாருக, லேயே பொது... பிடாதி... தவருகு... குழுக்க... குறிப்பி... மக்களா... காங்கிர... வரிகளு... துளியுப்... பது தெ... விதிக்... வரிகளி...

‘தொழில் துறைகளுக்கு மட்டுமே சர்க்கார் பணம் ஒதுக்குகிறது’

‘தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட திட்டங்கள் காணோம்’

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளரிடை சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,

சென்னை, ஜூலை 4—

2—7—56 இரவு 7-30 மணியளவில் சென்னை சர்க்கார் தீவிரப் போக்குவரத்து தொழிலாளர் பொதுச் சங்கத்தின் ஆதரவில், சென்னை ‘நேப்பியர் பார்க்’ இல், மேற்படி சங்கத்தின் தலைவர் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சட்ட மன்றத் தி. மு. க. உறுப்பினர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களும், மேற்படி சங்கத்தின் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணன் அவர்களும் தொழிலாளர் பிரச்சினை குறித்துப் பேசினர்.

கூட்டத்திற்கு ஏராளமான போக்குவரத்துத் தொழிலாளர்கள் வந்திருந்தனர். சென்னை சர்க்கார் தீவிரப் போக்குவரத்துப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தலைவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவரின் முன்னுரைக்குப் பின், சங்கத்தின் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், நாட்டுக்கு தொழிலாளர்கள் அச்சாணியை போன்றவர்கள் என்றும், அவர்களை அரசியலார் ஒதுக்கி வைப்பது கூடாது என்றும், உண்மையான தொழிலாளர் தலைவர்களை தொழிலாளர்கள் உணர்ந்து ஒன்றுபட்டு பாடுபட்டால் முன்னேற முடியும் என்றும், தொழிலாளர்களிடையே பிளவு கூடாதென்றும் வலியுறுத்தினர்.

அடுத்து, தோழியர் சத்தியவாணிமுத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“தொழிலாளர் சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் மோதி, அச்சங்கங்கள் சுக்கு நூறாக உடைந்து போகின்றன; அந்தநிலை கூடாது; தொழிலாளர் சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணையாமல் இயங்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அதே போல இத்தொழிற் சங்கமும் இயங்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

“சென்னை சர்க்கார், பஸ்கள் தேசிய மயமாக்கப்பட்ட பின்பு பல இலட்ச ரூபாய்களை இலாபமாகப் பெறுகிறார்கள்; ஆனால், அவ்வாறு இலாபம் பெற்றும் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு ஊதிய உயர்வு தருகிறார்கள் என்றால், ‘ஒன்றுமில்லை,’ என்ற நிலைதான் இருக்கிறது.

“பொது மக்கள் தாங்கள் ஏறும் பஸ்களைப் பற்றியோ, தொழிலாளர்களைப் பற்றியோ ஏதும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை; ஏதோ நாம் கொடுக்கிற பணம் சர்க்காருககுப் போய்ச் சேருகிறது,’ என்றுதான் எண்ணுகிறார்களே தவிர, பஸ் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேருகிறதா? தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா என்பதைப் பற்றித் கவலைப்படுவதில்லை.

“சர்க்கார் பஸ்கள் பல இடங்களில் நின்று விடுவதையும் அதைப் பொது மக்களே தள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுவதையும், ‘ஆட்டோ ரிக்ஷாவின் சத்தமே தேவலை’ என்று எண்ணத்தக்க அளவுக்கு இருக்கும் பஸ்களின் சத்தத்தையும், மற்றும் அதுபோன்ற குறைகளையும் காண்கிறோம். அதுமட்டுமல்ல— ‘ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்’ என்ற கொள்கையைப் பஸ்களில் மட்டும்தான் இந்த சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறது; அந்த அளவுக்கு வசதிக் குறைவாக—எல்லோருக்கும் தொல்லை தருவதாக அவைகள் இருக்கின்றன. பெண்கள் ஏறும் வழியை 10 நாட்களுக்கு ஒருமுறை மாற்றியமைக்கிறார்கள்; அதனால் மக்கள் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

“பஸ்களை சர்க்கார் ஏற்று நடத்துவதால், தனிப்பட்டவர்கள் நடத்தியபோது இருந்த இலாபம் இப்போது இல்லை; காரணம், இந்த சர்க்காரில் எந்த ஒரு இலாகாவிலும் கவனக் குறைவு காணப்படுகிறது; தொழிலாளர்களுக்கு போதிய ஊதியம் கொடுப்பதில்லை. ஆனால் தனியார் துறையினர் சர்க்காரைவிட அதிகப்படியான ஊதியம் தருகிறார்கள்; எனவே, அதிக இலாபமும் பெறுகிறார்கள். சர்க்கார் அதிக இலாபம் பெறுகிறதென்று இருந்தாலும் தொழிலாளர்களை ஒதுக்கியே வைத்து விடுக்கிறார்கள்; தொழிலாளர்களையே ஒதுக்கி விடுகிறார்ளென்றால், இதைவிட பயங்கர சர்க்கார்’ தொழிலாளர்களுக்கு வேறு உண்டா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

“இந்த சர்க்காரின் வரவு—செலவுத் திட்டத்தில் தொழிலுக்கும்—தொழில் துறைகளுக்கும் பணம் ஒதுக்கி யிருக்கிறார்களே தவிர, தொழிலாளர்களுக்காக பணமும் ஒதுக்கவில்லை—திட்டமும் ஏற்படுத்த வில்லை.

“இதை யெல்லாம் சட்ட மன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கேட்போம் என்று உறுதி கூறுகிறேன்”

இறுதியாக தலைவர் தனது முடிவுரையில், தன்னை சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்த தொழிலாளர் தோழர்களுக்கு நன்றி கூறியும், இச்சங்கத்திற்கு தனது ஆற்றல் முழுவதையும் ஈடுபடுத்துவதாக உறுதி கூறியும், தொழிலாளர்கள் படும் அல்லல்களைப் பற்றியும் விளக்கிப் பேசினார்.

சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

முதலமைச்சர் மிரட்டல்!

ஐதராபாத், ஜூலை 4—

‘ஜமபந்தி’ வேலையிலும் மற்ற கடமைகளிலும், அரசாங்க அதிகாரிகளுடன் ஒத்துழைக்க மறுக்கும் கிராம அதிகாரிகளை உடனடியாக வேலையிலிருந்து விலக்கி வைக்க (‘சஸ்பெண்ட்’) அரசாங்கம் ஆவன செய்யும் என்று ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன வசதி இல்லாமல் உற்பத்தி பெருகுமா?

சட்டசபையில் சி. நடராசன் கேள்வி

சென்னை, ஜூலை 4—

நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கழக உறுப்பினர் திரு. நடராசன் கலந்துகொண்டு, பல முற்போக்கான யோசனைகளைக் கூறியுள்ளார்; அவரது பேச்சின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“விவசாய சம்பந்தமாக அரசாங்கம் பல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது; அதே நேரத்தில் பல பொருள் வசதிகள் கிடைப்பதற்கு வகைசெய்திருப்பதையும் மறுக்கமுடியாது. ஆனால், இவ்வசதிகள் சரியான வகையில் கிடைப்பதற்கு வழி ஏற்படுத்தவேண்டும்.

“கடனுக்காக விவசாயிகள் விண்ணப்பம் கொடுத்த ஒரு ஆண்டிற்குப் பிறகே கடன் தொகை விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. இம்மாதிரி பல குறைபாடுகள் விவசாய அலுவலகங்களில் இருந்துவருகிறது; இக்குறைகளையெல்லாம் சர்க்கார் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, கடன் தொகைகள் உரிய காலத்தில் கிடைக்குமாறு செய்யக் கோருகிறேன்.

“விவசாயம் வளமுற நீர்ப்பாசன வசதி முக்கியமானது பெரிய பெரிய திட்டங்களை அதிகச் செலவில் மேற்கொள்ளப்படுகிறது; ஆனால், மக்களுக்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகே அதன்மூலம் பலன் ஏற்படுகிறது. இதைவிட்டுவிட்டு, பல சிறிய திட்டங்களை வகுத்து ஆங்காங்கே நன்கு நிறைவேற்றி வைத்தால். மாபெரும் திட்டங்களினால் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் நன்மையைவிட உடனடியாக மக்களுக்கு அதன்மூலம் அதிக பலன் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம், சிறிய ஏரிகள் குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டால், விவசாயிகளுக்குப் பயனுள்ளதாயிருக்கும். இப்படி செய்யாமல், பெரிய திட்டங்களையே பல கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு சென்றால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

“கள்ளக்குறிச்சி தாலுகாவில் குளாங்குறிச்சி சமீபத்தில் பல ஆண்டுகளுக்குமுன் வரையறுக்கப்பட்ட மாபெரும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றி அதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட வழி செய்யவேண்டும்; அதன் மூலம் பல ஏக்கர் நிலங்களை விவசாயிகள் சாகுபடி செய்ய வசதி ஏற்படும். சிறிய பல ஏரிகளையும், அதனைச் சேர்ந்த வாய்க்கால்களையும் ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும்.

“கள்ளக்குறிச்சி தாலுகாவில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத இந்த நேரத்தில், விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்து பயன்பெறுவதற்கு அங்கு சர்க்கரைத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென கோரப்பட்டு வந்திருந்தும் இதுவரை ஆவன செய்யவில்லை. இவ்விதத் தொழிற்சாலையை அங்கு ஏற்படுவதற்கு வழிகோலினால் விவசாயிகள் கரும்பைப் பயிர் செய்து இலாபகரமான தொழிலாக அதனை ஏற்படுத்த முடியும்.

சின்ன சேலத்திலிருந்து செங்கற்பட்டுவரை இரயில் பாதை போடுவதற்கு பல வருடங்களாக ‘சர்வே’ நடந்துவருகிறது; ஐந்து ஆண்டுகளாகியும் இது நல்ல முறையில் செய்யப்படவில்லை. அரசாங்கம் உடனடியாக இதைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் விவசாயிகளுக்கும் தொழில் அபிவிருத்திகளுக்கும் மிக்க உதவியாக இருக்கும். அதிகாரிகள் இதைப் பற்றி விசாரித்தால் மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த வேலைக்குப் பணம் எதிர்பார்ப்பதாகவும், அது கிடைக்கவில்லை என்றும் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதை உடனடியாகச் செய்து கொடுத்தால் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தீரும்.

“சர்க்கார் அலுவல்களுக்கே முக்கியமானவர்களான கிராம அதிகாரிகள் வாழ்க்கை வசதியின்றி அல்லலுறுகின்றனர்; கண்துடைப்பிற்காக அவர்களுக்கு ஏதோ சிறிது சம்பள உயர்வு தந்துவிட்டால் மட்டும் போதாது; நான் ஒரு கிராம அதிகாரியாக இருந்திருக்கிறேன். அவர்களுடைய கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும்; எனவே அவர்களுக்கு அதிக ஊதியம் தரப்பட வேண்டுமெனக் கோருகிறேன்.

“கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் போதுமான மருந்துகள் விநியோகம் செய்யப்படாததால் மக்கள் பலவித இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவசியமானால் மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெற்றாவது இவ்வசதிகளை செய்து கொடுத்தால் அங்குள்ள மக்களின் நோய்கள் தீர உதவியாக இருக்கும்.

“கள்ளக்குறிச்சி பிரசவ மருத்துவ மனையில்கூட மின்சார வசதி கிடையாது; இவ்வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும்.

“இவ்வட்டாரத்தில் தேசிய விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் நடைமுறையில் இருந்தும் ரோடு வசதி, மின்சார வசதி இல்லாமல் பல கிராமங்கள் இருக்கின்றன. இவ்வசதிகளை எல்லாக் கிராமங்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.”

‘நிர்வாகக் குறைகளைக் களைந்தெறிக’

சட்டசபையில் எம். செல்வராஜ் யோசனை

சென்னை, ஜூலை 4—

நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கழக உறுப்பினர் எம். செல்வராஜ் கலந்துகொண்டு அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார் ; அதன் சாரம் இங்கு தரப்படுகிறது :—

“மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனையை அதிகப்படுத்தி குறைந்தது இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனையாவது விதிக்கப்பட வேண்டும்.

“மதுவிலக்குத் திட்டத்தை அமுல் செய்யும் நிர்வாகத்தில் உள்ள ஊழல்களையும், குறைகளையும் களைந்தெறிய வேண்டும்.

“மதுவிலக்குத் திட்டத்தை பஞ்சாயத்துக்களின் மூலம் நிறைவேற்ற முற்பட்டால் நல்ல பலன் ஏற்படும்.

“வைத்திய விடுதிகளை, மாவட்ட ஆட்சி மன்றங்கள் நடத்துவதைவிட, அரசாங்கமே ஏற்று நடத்துவது நல்லது.”

‘வேடனுடைய வலையில் சிக்கிய பறவைகளா?’

‘தாழ்த்தப்பட்டோர் நிலை உயர வேண்டும்’

சட்டசபையில் எம். ஆனந்தன் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 4—

சென்னை சட்டசபையில் இன்று வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட கழக உறுப்பினர் பி. எஸ். ஆனந்தன் அவர்கள் பேசுகையில் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் செய்ய வேண்டிய அவசியமான காரியங்களைப்பற்றி எடுத்துரைத்துள்ளார். அவர் பேசியதின் சாரம் இங்கு தரப்பட்டுள்ளது :—

“நிதி அமைச்சரின் திட்டத்தை நான் வருத்தத்துடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்கிறேன்.

“தாழ்த்தப்பட்டவர்களுக்கு ரூ. 194 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; அதற்காக நான் மகிழ்கிறேன்; ஆனால், இந்தத் தொகை அவர்களுக்குச் சேரவேண்டும்—பயன்தர வேண்டும். இரண்டு பூனைகள் அப்பத்தைப் பங்கிட்டுக் கொள்ள குரங்கிடம் போய், இறுதியில் அப்பம் முழுவதையும் குரங்கிடமே பறிகொடுத்துவிட்ட நிலை ஏற்படக்கூடாது.

எனது கள்ளக்குறிச்சி தாலூகாவில் தாழ்த்தப்பட்டவர்கள், வேடன் வலையில் சிக்கிய பறவைகள்போல உள்ளனர். இதேநிலைதான் மற்ற இடங்களிலும் இருக்கும். எனவே, ஆதிதிராவிட மக்கள் விஷயத்தில் அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு, அவர்கள் முன்னேற்றத்திற்கு மேலும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்”

‘உணவுப் பிரச்சினைக்குத் தீவிரமான திட்டங்கள் தீட்டப்படாததேன்?’

வேலையில்லாத் திண்டாட்டம் தீர வழியில்லை?

சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம் பேச்சு

சென்னை, ஜூலை 4—

சென்னை சட்டசபையில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கழக உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கலந்துகொண்டு பல அரிய யோசனைகளை கூறியுள்ளார். அவர்கள் பேசியதின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“கனம் நிதிஅமைச்சர் தயாரித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் நாட்டில் நிலவியுள்ள நிலையைக்கொண்டோ, மக்களின் தேவைகளை மனதில் கொண்டோ அதனைத் தீட்டியதாகக் கூறுவதற்கில்லை.

“எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. ஆனால் நிதி அமைச்சரின் திட்டத்தில் இதைப் பற்றி ஒன்றும் காணப்படவில்லை; இது மிகவும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

“கிராம ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது; அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில், உயர்த்தியுள்ள தொகை போதுமானதல்ல என்றும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

“உணவுப் பிரச்சினையிலும் மாநில அரசாங்கம் தீவிரமான திட்டம் தீட்டவில்லை. விவசாயிகளுக்கு உரம் வாங்கிக்கொள்வதற்குத் தரப்படும் கடன் தொகை போதாது.

“உணவுத் தானியங்களின் விலை உயர்ந்துள்ளது; அது உணவுத் தானிய உற்பத்தியையே நம்பியுள்ளவர்களுக்கு சாதகமாக உள்ளது.

“உணவுப் பண்டங்களின் விலை அடிக்கடி ஏறியும், ஏறி - இறங்கியும் வருவது தடுக்கப்பட வேண்டும். உணவுப் பண்டங்களின் விலை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.”

கழகக் கூட்டங்கள்

★

தஞ்சை:
திலகர் திடலில்
7—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: மாயூரநாதன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ

★

கோபி—கூகலூர்:
7—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். ஏ. ஆறுமுகம்
பேசுவோர்:
க. அன்பரசு
வேலவன்
சாமிநாதன்

★

கோவை:
காந்தி சதுக்கம்
7—7—57 இரவு 7 மணிக்கு
பேசுபவர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

ஈரோடு:
காரை வாய்க்கால் மைதானம்
7—7—57 அன்று மாலை
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எஸ். அப்பாவு

★

சேலம் — கொமாரசாமிப்பட்டி:
கழக முன்னிலையில்
7—7—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: சி. இரத்தினசாமி
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
வி. சிவப்பிரகாசம் பி.ஏ., பி.எல்.
இ. ஆர். கிருட்டினன்
ப. கண்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஏ. மாரியப்பன் எம்.சி.

★

புதுவேட்டக்குடி:
(அரியலூர் வட்டம்)
8—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
இராசன் இராமசாமி
பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். இராமசாமி
இரா. நாராயணன்

★

ப. புகலூர்:
(திருச்சி மாவட்டம்)
குத்தறிவுப் படிப்பகத் திடலில்
—7—57 இரவு 7 மணிக்கு
தலைவர்:
அம்மையப்பன் பி.ஏ., பி.எல்.
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
கரிகாலன்

★

ாக்குடி—பள்ளத்திவயல்
அண்ணு திடல்
—7—57 மாலை 5 மணிக்கு
தலைவர்; நா. மாரிமுத்து
பேசுவோர்:
முக. மீரா
இராம. அசோகன்
அரு. குமாரசாமி
ஓவியன் கருணு
பாடல்கள்: பந்தா

'போர்வாள்'

7—7—57 மாலை 6-30மணிக்கு வ லூர் — முள்ளிப்பாளையம் ியேட்டரில் போர்வாள் நாடக ன்றத்தாரின் 'போர்வாள்' நாட ம் நடைபெறும்; தோழர்கள் சி . சிற்றரசு, போளூர்-சுப்பிரமணி ம், அ. கருத்தோவியன், பி. வதாந்தம் முதலியோர் நடிப்பர்.

மாநிலத்தின் சுதந்திரம்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ட்டளைகளைப் பிறப்பித்துள்ளது. ஆனுல், இதுபோன்ற கட்டளை ளைப் பிறப்பிக்க இருவருக்குத் ான் அதிகாரம் உண்டென்று ருதுகிறேன். ஒருவர் — பிரதம ந்திரி; மற்றவர்—மத்திய மந் ிரி சபையினர்; அப்படியிருக்க, ள்நாட்டு இலாகா எப்படி கட் ளைகளைப் பிறப்பிக்கிறதோ தரியவில்லை?"

நாலை 7-ம் நாள்

★

சிதம்பரம் வட்ட

தி. மு. க. கிளைகளுக்கு:

"7—7—57 காலை 10-மணியளவில், சிதம்பரம் நகரத்தில் தோழர் இரத்தின பாலகுருசாமி அவர்கள் தலைமையில், தொகுதி எம். பி. திரு. கனக சபை (பிள்ளை) அவர்களைச் சந்தித்து, வரி எதிர்ப்பைத் தெரிவிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, வட்டத்திலுள்ள எல்லாக் கிளைக் கழகத் தோழர்களும் கொடிகளுடன், அன்று காலை சிதம்பரம் வீரபத்திரசாமி கோவில் தெரு தி. மு. க (உட்கிளை-1)யின் அலுவலகத்தில் கூடுமாறு வேண்டுகிறேன்"
என்று நகர செயலாளர் இரா. சக்கரவர்த்தி அறிவிக்கிறார்.

★

தென்காசி(பாராளுமன்ற)

தொகுதி தி. மு. கழகங்களுக்கு:

"புளியங்குடியிலிருக்கும் தென்காசி (பாராளுமன்ற) தொகுதி உறுப்பினர் தோழர் சங்கர பாண்டியம் பிள்ளை அவர்களிடம் புதிய வரிக் கொடுமைகளை விளக்கி கூற, 7—7—57 பிற்பகல் 3 மணிக்கு புளியங்குடி தி. மு. கழக அலுவலகத்திலிருந்து, மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் செல்லும்; எனவே மேற்படி தொகுதி தி. மு. கழகங்களும்—ஆதரவாளர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"
என்று, புளியங்குடி தி. மு. கழகச் செயலாளர் பி. ஏ. கங்காதரன் அறிவிக்கிறார்.

★

சேலம் (பாராளுமன்ற)

தொகுதி தி.மு.க.தோழர்களுக்கு:

"7—7—57 மாலை 4 மணிக்கு சேலம் நகர தி. மு. கழகப் பணிமனையிலிருந்து மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலமாகச் சென்று, சேலம் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். வி. இராமசாமி அவர்களிடம் புதிய வரிக் கொடுமைகளை விளக்கி விண்ணப்பம் அளிக்கப்படும்; கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன்"
என்று, சேலம் நகரச் செயலாளர் இ. ஆர். கிருட்டினன் அறிவிக்கிறார்.

★

திருச்செங்கோடு பாராளுமன்ற

தொகுதி தி.மு.க. தோழர்கட்கும், ஆதரவாளர்கட்கும்:

"7—7—57 மாலை 5 மணிக்கு, திருச்செங்கோடில் 'பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்' ஊர்வலமும், மாலை 6 மணிக்கு, ஓர் பொதுக்கூட்டமும் நடத்த இருப்பதால் இத்தொகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்களனைவரும் மாலை 4 மணிக்குள் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்,"
என, திருச்செங்கோடு நகரத் துணைச் செயலாளர் தோழர் தி. நடேசன் அறிவிக்கிறார்.

★

கோபி, பவானி, பெருந்துறை

வட்ட தி.மு. க. தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்:

"கோபி, பவானி, பெருந்துறை வட்டங்களைச் சேர்ந்த தி. மு. கழகங்களின் சார்பில் சைக்கிள் ஊர்வலம் 7—7—57 ஞாயிறு மாலை 3 மணி அளவில் கோபி தி. மு. கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்டு கூகலூருக்குச் செல்லும்; அங்கு பார்லிமெண்ட் உறுப்பினரைச் சந்தித்து, புதிய வரிகளை ரத்து செய்வதற்குப் போராடும்படி

ஈரோடு வட்ட

தி. மு. கழக செயலாளர்களுக்கு:

"7—7—57 மாலை 5 மணிக்கு ஈரோடு வட்ட தி. மு. கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது ஈரோடு வட்டத்தில் உழவர் முன்னேற்றக் கழகம் அமைப்பது குறித்தும், கழக வளர்ச்சி குறித்தும் ஆலோசிக்கப்படும்; உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகின்றேன்"
என்று, அமைப்பாளர் ஈரோடு—அப்பாவு அறிவிக்கிறார்.

சேலம் 28, 29-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்களுக்கு:

7—7—57 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் மேற்படி உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

கோரிக்கை சமர்ப்பிக்கப்படும். கோபி மக்கள் சபை தொகுதியிலுள்ள தி. மு. க. தோழர்கள் அனுதாபிகள், பொதுமக்கள் அனைவரும் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் பங்குகொள்ள வேண்டுகிறோம்; ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் தோழர்கள் 7—7—57 பகல் 2 மணிக்குள், கோபி தி. மு. க. அலுவலகத்துக்கு வந்துசேர வேண்டிக்கொள்கிறோம்"
என, கோபி—தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. ஏ. வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

★

கடலூர் மக்கள் சபைத் தொகுதி தி. மு. கழகத் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

"7—7—57 மாலை 4 மணக்கு கடலூர் ஓ. டி. தி. மு. கழகப் பணிமனையிலிருந்து புதிய வரி எதிர்ப்பு மாபெரும் ஊர்வலம் கே. எம். வேலு அவர்கள் தலைமையில் புறப்பட்டு, வசந்தராயன்பாளையம், வண்டிபாளையம், திருப்பாபுலியூர், மஞ்சகுப்பம் வழியாக புதுப்பாளையம் சித்தராம நகரிலிருக்கும் கடலூர் தொகுதி பாராளும் மன்ற உறுப்பினர் டி. டி. முத்துகுமாரசாமி நாயுடு அவர்களை அவர் இல்லத்தில் சந்தித்து புதிய வரிக் கொடுமை முறையீடு விண்ணப்பத்தைக் கொடுத்து மஞ்சை நகர் மைதானத்தில் வந்து முடிவடையும். அவ்வமயம் கிளைக் கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்துக்கொள்ள வேண்டுகிறோம்"
என்று, நகர தி. மு. கழகச் செயலாளர் கி. கோவிந்தராசன் அறிவிக்கிறார்.

★

கோவை, நீலகிரி, பொள்ளாச்சி மக்கள்சபைத் தொகுதி தி. மு. கழகக் கிளைகளுக்கு:

"7—7—57 பிற்பகல் 3 மணி அளவில், கோவை நகர தி. மு. கழகத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, நகரில் தங்கியிருக்கும் மக்கள்சபை உறுப்பினர்களான கோவை—தோழியர் பார்வதி கிருட்டினன், நீலகிரி—டாகடர் சி. நஞ்சப்பா, பொள்ளாச்சி—பி. ஆர். இராமகிருட்டினன் ஆகியோரிடம் புதிய வரிக் கொடுமைகளை விளக்கும் 'முறையீடு விண்ணப்பத் தாள்'களை கொடுத்துவிட்டு காந்தி சதுக்கம் வந்தடையும்; எனவே, மேற்கண்ட தொகுதிகளில் உள்ள கிளைக் கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கவேண்டுகிறேன்,"
என, கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் சே.அ. இராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

ஸ்ரீ லலித கலா மன்றம்—சென்னை-1

ராஜா அண்ணுமலை மன்றத்தில்
7-7-57 ஞாயிறுமாலை 6-15மணிக்கு
திரு. க. அன்பழகன் M.A., M.L.A.
அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். இராஜேந்திரன்
நாடக மன்றத்தார் அளிக்கும்
'புதுவெள்ளம்'
(தமிழ் சமூக நாடகம்)
கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1.
நாளை காலை 9-மணியிலிருந்து ஹாலில் டிக்கெட்டு விற்கப்படும்

வரி விதிப்பு முறையிடும் நாள்

சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம்

★

7—7—57 மாலை 6 மணிக்கு
நேப்பியர் பூங்கா திடலில்
தலைவர்: கோ. செங்குட்டுவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
—சென்னை மாவட்ட தி.மு.க.

★

மாபெரும் ஊர்வலம்

வடசென்னைத் தொகுதி:

நகரசபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில் தொகுதி பொதுமக்களும், கிளைக் கழகத் தோழர்களும், இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து 7—/—57 பிற்பகல் 2-மணிக்குப் புறப்பட்டு, மன்னார்சாமி கோயில் தெரு, சிமெண்ட்ரி ரோடு, திருவொற்றியூர் ஐரோடு, பேசின்பிரிட்ஜ் ரோடு, வால்டாக்ஸ் ரோடு, யானைகவுனிபாலம், டிமெல்லோஸ் ரோடு வழியாகச் சென்று, திரு. எஸ். சி. சிவந் தோணிப்பிள்ளை அவர்களிடம் முறையீடு நகலைக் கொடுத்துவிட்டு, பேரம்பூர் போக்ஸ் ரோடு, சேர்மையா ரோடு, வேப்பேரிஐரோடு, சைடாம்ஸ் ரோடு, லேவல் கிராசிங் வழியாக வந்து கூட்டத்தை அடைவர்.

தென்சென்னைத்தொகுதி:

நகரசபை உறுப்பினர் தோழர் அ. பொ. அரசு அவர்கள் தலைமையில் தொகுதி மக்களும், கிளைக் கழகத் தோழர்களும், மெரினு கடற்கரையிலிருந்து பிற்பகல் 3-மணிக்குப் புறப்பட்டு எல்லியட்ஸ் ரோடு வழியாகச் சென்று, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரிஅவர்களிடம் முறையீடு நகலைக் கொடுத்துவிட்டு மோபரீஸ் ரோடு, இராயப்பேட்டை கடைத் தெரு, வெஸ்ட்காட் ரோடு, ஜெனரல் பீட்டர்ஸ் ரோடு, மவுண்ட்ரோடு, டாம்ஸ்ரோடு, சாமிநாய்க்கன் தெரு, அருணுசல நாய்க்கன் தெரு வழியாக வந்து கூட்டத்தை அடைவர்.

உடையார்பட்டியில் பொதுக் கூட்டம்

7—7—57 மாலை 6½ மணிக்கு நெல்லை சந்திப்பு — உடையார்பட்டி அழகிரி நினைவு மன்றத்தின் சார்பில், பாண்டியன் திடலில் வழக்கறிஞர் டி. செவந்தி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, நெல்லை மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் துணைச்செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நாதசுர மன்னர்

டி.என். இராசரத்தினம் படிப்பகம் திறப்புவிழா

அண்ணு, மு. கருணுநிதி கலந்துகொள்வர்

7—7—57 மாலை 4 மணிக்கு திருவாரூர்-தெற்கு வீதி, இசை வேளாளர் முன்னேற்ற சங்கக் கட்டிடத்தில் சங்கத் தலைவர் தோழர் டி. எஸ். பாலகிருட்டினன் அவர்களின் முயற்சியால் துவங்கவிருக்கும் மேற்படி படிப்பகத் திறப்பு விழா, திரு. 'சங்கீத கலாநிதி' திருவிழிமிழலை— எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது அண்ணு அவர்கள் படிப்பகத்தை திறந்து வைப்பார்; தோழர் மு. கருணுநிதி அவர்களும், மற்றும் பலரும் சிறப்புரை நிகழ்த்துவர்.

நடராசபுரத்தில் புதிய மின்சாரம்

அண்ணு இயக்கிவைப்பார்

8—7—57 திங்கட்கிழமை இரவு 7-30 மணிக்கு, திருச்சி மாவட்டம்-நடராசபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மின்சார விசையை அண்ணு அவர்கள் தட்டி இயக்கிவைப்பார்கள். விழாவிற்கு திருச்சி மாவட்ட தண்டல் நாயகம் திரு. ஆர். எஸ். மலையப்பன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை வகிப்பார்.

அம்பாசமுத்திரம் வட்ட

தி. மு. கழகச் செயலாளர்களுக்கு:

'7—7—57 காலை 10-மணிக்கு, கல்லிடைக்குறிச்சி தி. மு. கழகக் கட்டிடத்தில், அம்பை வட்டக் குழுக் கூட்டம் வழக்கறிஞர் இரத்தினவேலு தலைமையில் நடைபெறும்; கிளைக் கழகங்களிலிருந்து பிரதிநிதிகளை அனுப்பக் கோருகிறேன்' என்று தோழர் வி. எம். ரெங்கசாமி அறிவிக்கிறார்.

ஆண்டுவிழாவும் மாநாடும்

7—7—57 மாலை 6 மணிக்கு, வண்ணை—அமீதியா திடலில் (காகா தோப்பு - வண்ணாரப்பேட்டை கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியருகில் சென்னை மாகாண பீடி பிராஞ்சு மானேஜர்கள் சங்க 8-வது ஆண்டு விழாவும்-மாநாடும் தோழர் ஏ. வி. குமார் தலைமையில் நடைபெறும்.

திண்டுக்கல்லில் கூட்டம்

7—7—57 மாலை 6½ மணிக்கு, திண்டுக்கல்—சௌந்திர பாண்டியனுர் நினைவு மன்றச் சார்பில், காந்தியார் திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர் நாஞ்சில் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.